සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved]

අධ්‍යාපන අමාත්‍යාංශය

கல்வி,உயர்கல்வி தொழிற்கல்வி அமைச்சு

Ministry of Education, Higher Education and Vocational

**85 T I**

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சை, 2025(2026) மாதிரி முன்னோடி வினாப்பத்திரம்**

**General Certificate of Education (Ord.Level) Examination,2025(2026) Preliminary Exam**

மனைப் பொருளியல் 1

**Home Economics**

*மூன்று மணி*

*Three hours*

**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
**Additional Reading Time - 10 minutes**

**வினாப்பத்திரத்தை வாசித்து,வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போதுமுன்னுரிமை வழங்கவும், வினாக்களை ஒழுங்கமைக்கவும் பயன்படுத்தவும்**

**மனைப்பொருளியல் 1**

**அறிவுறுத்தல்கள் :**

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செயக
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில்ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உங்கள் விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (x) இடுக
- அவ் விடைத் தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. கீழே காணப்படும் உணவுகளில் புரதப்பூரணப்படுத்தலுக்கு பொருத்தமான பருப்பானது
   (1) குரக்கன் (2) சோளன் (3) உழுந்து (4) தினை

2. கீழே காணப்படும் (அ), (ஆ) பகுதிகளை அவதானிக்கவும்

| (அ) | (b) |
|---|---|
| (A) -இறைச்சி | (E) – கேசின் |
| (B) – பால் | (F) – அல்பியுமின் |
| (C) - முட்டை | (G) இலக்கியுமின் |
| (D) – அவரை இனமும் பருப்பு வகையும் | (H) – மயோசின் |

   பகுதி (அ) உள்ள உணவுகளில் காணப்படும் புரதங்கள் (ஆ) பகுதியில் காணப்படும் சரியான ஒழுங்கு முறையானது
   (1) H, E,F,G (2) F,H,E,G (3) H,G,E,F (4) F,H,G,H

3. கீழே காணப்படும் உணவுகளில் உணவுகளில் தானியத்தை மட்டும் பயன்படுத்தி தயாரிக்கப்படுவது
   (1) பயற்றம் பணியாரம் (2) தோசை (3) அலப்ப (4) பயறுகலந்த பாற்சோறு

4. பழங்களில் அதிகளவில் காணப்படும் மொனேசக்கரைட்டு
(1) குளுக்கோசு (2) பிறக்டோசு (3) மோல்றோஸ் (4) கலற்றோஸ்

5. உணவுகளில் காணப்படும் சக்கரைட்டுக்கள் தொடர்பாக கீழே காணப்படும் தகவல்களை அவதானிக்கவும்
A –தேனில் பிரக்டோஸ் அடங்கியுள்ளது
B – வீட்டில் பயன்படுத்தும் சீனியில் மோல்டோஸ் அடங்கியுள்ளது
C – முளைத்த தானியங்களில் மோல்டோஸ் அடங்கியுள்ளது
இவற்றுள் சரியான தகவலானது
(1) A மட்டும் (3) A யும் C யும் மட்டும்
(2) A யும் B யும் மட்டும் (4) B யும் C யும் மட்டும்

6. பின்வரும் எந்த வடிவில் விலங்குகளின் உடலில் சக்தி சேமிக்கப்படுகின்றது
(1) மாப்பொருள் (2) செலுலோஸ் (3) அமிலோஸ் (4) கிளைக்கோஜன்

7. அத்தியாவசியமான அமினோஅமிலங்கள் அடங்காத புரதம்
(1) மயோசின் (2) கேசின் (3) இலக்கியுமின் (4) அல்பியுமின்

8. கொழுப்பு அமிலங்களை வகைப்படுத்தும் போது ஸ்திரிக் அமிலமானது
(1) நிரம்பிய கொழுப்பமிலம் (3) தனி நிரம்பாக் கொழுப்பமிலம்
(2) நிரம்பாக் கொழுப்பமிலம் (4) பல் நிரம்பாக் கொழுப்பமிலம்

9. இரும்பு அகத்துறிஞ்சலுக்கும் கொலாஜன் உற்பத்திக்கும் அவசியமான உயிர்சத்தானது
(1) உயிர்சத்து A (2) உயிர்சத்து B (3) உயிர்சத்து C (4) உயிர்சத்து D

10. குருதி உறைதலுக்கு அவசியமான கொழுப்பில் கரையும் உயிர்சத்தானது
(1) உயிர்சத்து A (2) உயிர்சத்து D (3) உயிர்சத்து E (4) உயிர்சத்து K

11. தீவிர குறைபோசணை நிலைமையினால் எற்படக்கூடிய நிலைமை
(1) உயரத்திற் ஏற்ற நிறை இன்மை (2) வயதிற்குரிய உயரம் இன்மை
(3) வயதுக்கு ஏற்ற நிறை இன்மை (4) குருதிச் சோகை

12 குருதிச் சோகையால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவரிடம் காணப்படாத அறிகுறியானது
(1) இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தல் (2) சமிபாடும் அகத்துறிஞ்சலும் குறைவடைதல்
(3) ஞாபக சக்தி குறைவடைதல் (4) வெளிறும் தன்மை

13. மாவையும் கொழுப்பையும் சரியான விகிதத்தில் கலந்து தயாரிக்கும் உணவானது
(1) மீன் பாண் (2) பனிஸ் (3) பான் கேக் (4) இக்லேயாஸ்

14. உணவச் சமிபாட்டில் இரசாயன சமிபாடு ஆரம்பிக்கும் இடமும் நொதியமும்
(1) வாய் திருச்சின்
(2) வாய் பெப்சின்
(3) இரப்பையில் அமிலேசு
(4) வாய் அமிலேசு

15. பாலில் விருத்தியடைந்து பாலை பழுதடையச் செய்யும் பற்றீரியாவானது
(1) அஸ்பஜிலஸ் (2) மியுகோர் (3) ஸ்ட்ரெப்ரோ கொகஸ் (4) பெனிசிலியம்

16. வீட்டுக்கு வருகை தரும் விருந்தினர் ஒருவருக்கு ஒரு கோப்பை தேனீரைப் பரிமாறும் சரியான முறையானது
    (1) விருந்தினரின் முன் பக்கமாக  (2) விருந்தினரின் இடது புறமாக
    (3) விருந்தினரின் வலது பக்கமாக  (4) விருந்தினரின் எதிர் பக்கமாக

17. சரியான கூற்றைத் தெரிவு செய்க
    (1) குழந்தைக்கு பத்து மாதம் முடியும் வரை தாய்ப்பால் மட்டுமே கொடுப்பது நல்லது
    (2) குழந்தைக்கு ஒருவருடம் நிறைவடைந்ததன் பின்பு குடும்பத்தினர் உட்கொள்ளும் உணவை ஊட்டுவது பொருத்தமானதாகும்
    (3) கட்டிளமைப் பருவத்தில் எண்ணெய், மா சேர்ந்த உணவுகளை உட்கொள் கொள்வது நல்லது
    (4) வயோதிபப் பருவத்தில் நார்உணவுகளை அதிகளவில் எடுத்துக் கொள்வது நல்லதல்ல

18. கட்டிளமைப்பருவ ஆரம்பத்தில் பாலியல் ஓமோன்களின் தாக்கத்தினால் ஏற்படுகின்ற முதற்பாலியல்பானது
    (1) உடலின் வடிவத்தில் மாற்றமும், உயரம் அதிகரித்தலும்
    (2) சூலகம், கருப்பை ஆகியவற்றின் விருத்தி
    (3) நிறை அதிகரித்தல், உயரம் அதிகரித்தல்
    (4) பாலியல் உறுப்புகளைச் சுற்றியும், அக்குளைச் சுற்றியும் முடி வளருதல்

19. கீழே காணப்படும் கூற்றுக்களில் கட்டிளமைப் பருவம் தொடர்பான சரியான கூற்றானது
    (1) பெண் பிள்ளைகளின் தசை நார்கள்விருத்தி அடைவதோடு ஆண் பிள்ளைகளினது கொழுப்பு திசுக்கள் வளர்ச்சி அடையும்
    (2) உடல் விருத்திக்கும் உள விருத்திக்கும் இடையில் தொடர்புகள் உண்டு
    (3) பிள்ளை வளர்ச்சியில் உடல் வளர்ச்சி விகிதம் குறைவடைகின்றது
    (4) உள வளர்ச்சிக்கும், மொழி வளர்ச்சிக்கும் இடையில் தொடர்பு உண்டு

20. கட்டிளமைப் பருவத்தில் மனவெழுச்சி தொடர்பான பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க
    (1) பொறுப்புகளை ஒப்படைத்தலும் செவிமடுத்தலும் மனவெழுச்சியை வளர்க்க உதவும்
    (2) சில வேளைகளில் கதைக்காமல் இருத்தலும், தனிமையிலிருத்தலும் துலங்கள்களாகும்
    (3) பதிலளிப்பதில் நிலையான தன்மையை காட்டுதல்
    (4) மனவெழுச்சி வேகமானது உடனடியானதும் தீவிரமானதும் ஆகும்

21. முற்பிரசவ விருத்திக் பருவங்களின் வளர்ச்சி கட்டங்கள் முறையே
    (1) சூல் பருவம், முளையப் பருவம், முதிர்மூலவுருப் பருவம்
    (2) முளையப் பருவம், சூல் பருவம், முதிர்மூலவுருப் பருவம்
    (3) முதிர்மூலவுருப் பருவம், முளையப் பருவம், சூல் பருவம்
    (4) சூல் பருவம், முதிர்மூலவுருப் பருவம், முளையப் பருவம்

22. பாலியல் மூலம் கடத்தப்படும் எவ் தொற்றுக்கள் கருப்பை கழுத்து புற்று நோய் ஏற்படக் காரணமாகின்றது
    (1) சிபிலிசு  (2) க்ளமீடியா  (3) பாலுறுப்பு உண்ணிகள்  (4) ஹேர்பீஸ்

23. புதிதாக பிறந்த குழந்தையின் தலையின் சுற்றளவானது
    (1) 24 சென்றி மீற்றர்  (2) 26 சென்றி மீற்றர்
    (3) 34 சென்றி மீற்றர்  (4) 36 சென்றி மீற்றர்

24. குழந்தைகளுக்கு ஒன்பதாம் மாத முடிவில் வழங்கப்படும் தடுப்பூசியானது
(1) M.M.R தடுப்பூசி (2) போலியோ வாய் மூலம் மூன்றாவது சொட்டு
(3) யப்பானீஸ் என்சைபலயிடிஸ் தடுப்பூசி (4) ஈர்ப்பு வலி தடுப்பூசி

25. பிறப்பு நிறை 2.5 கிலோகிராம் கொண்ட குழந்தையின் ஐந்தாம் மாதமுடிவின் நிறையானது
(1) 4 கிலோ கிராம் (2) 5 கிலோ கிராம்
(3) 6 கிலோ கிராம் (4) 7.5 கிலோ கிராம்

26. தாய்பாலை உறிஞ்சி குடிப்பதனால் சுரக்கும் ஓமோனானது
(1) வளர்ச்சி ஓமோன் (2) அன்ட்ரஜன் ஓமோன்
(3) புரோலக்டீன் ஓமோன் (4) ஈஜ்ட்ரஸன் ஓமோன்

27 குழந்தை பருவத்தில் இயக்க விருத்தி திறன்கள் சில கீழே காணப்படுகின்றன
அண்ணார்ந்து குப்புறவும், குப்புற இருந்து அண்ணார்ந்து திரும்பும்
தவழும்
உதவியுடன் எழும்பும்

மேலே காணப்படும் இயக்கவிருத்தித் திறன்களை குழந்தை எத்தனையாம் மாதத்தில் காட்டும்
(1) 6 -7 மாதங்களில் (2) 7 -8 மாதங்களில்
(3) 8 -9 மாதங்களில் (4) 9 -10 மாதங்களில்

28. அலங்காரத் தையல் முறைகளில் விளிம்புகளை பூரணப்படுத்துவதற்கு பயன்படுத்தும் தையலானது
(1) கம்பளித் தையல் (2) நீள்குறுந் தையல்
(3) வெட்டுக்குத்து தையல் (4) நரம்புத் தையல்


29. ஆடையின் சுருக்கிட்ட பகுதியை இன்னெரு பகுதியுடன் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருத்தானது
(1) எளிய பொருத்து (2) மேற்செறிப் பொருத்து
(3) தட்டைப் பொருத்து (4) பிரான்சியப் பொருத்து

30 பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றானது
(1) பிள்ளை ஆடையை தைப்பதில் முதல் படி முறையானது தோள் பொருத்தைத் தைத்தல்
(2) கம்பளித் தையலைத் தெறியோட்டைத தையல் எனவும் அழைக்கலாம்
(3) தழுவணை உறையின் திறப்பை மூடுவதற்கு வெல்கோ நாடாவை பயன்படுத்தலாம்
(4) மீன் முள்ளுத் தையலில் புறப்பக்கத்தில் வெட்டுக்குத்து போன்று தோற்றமளிக்கும்

31 பிள்ளைச் சட்டையைத் தைக்கும் போது மாணவர்களால் பின்பற்றிய முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன இவற்றுள் சரியான படிமுறையானது
(1) கையை உடற்பகுதியுடன இணைக்கும் போது கையின் கீழ் காணப்படும் பொருத்தை இரு பக்கமும் விரித்து வைத்துப் தைத்தல்
(2) சுவடுவரை சில்லின் அடையாளத்தின் சிறுநூர்லோடி இடைப் பகுதியைச் சுருக்கிக் கொள்ளல்
(3) உடற்பகுதியைத் தைத்த பின்பு வெளிப்புறத்தில் நாடா கொண்டு அலங்கரித்தல
(4) பின்பக்க திறப்பானது கழுத்து ஆழத்திலிருந்து மூன்று அங்குலம் பதிவாக உள்ளது

32. தையல் முறைகள் வெவ்வேறாக காணப்பட்டாலும், ஒரே மாதிரியான தோற்றத்தைக் காட்டும் அலங்காரத் தையல்கள் இரண்டு
   (1) அடுக்கு நாணயவுருத் தையல், கம்பளித் தையல்
   (2) பிரான்சிய முடிச்சு, அடுக்கு நாணயவுருத் தையல்
   (3) வெட்டுக்குத்துத் தையல், கம்பளித் தையல்
   (4) பிரான்சிய முடிச்சு, வெட்டும்குத்துத் தையல்

33. தட்டு விரிப்பை தைக்கும் போது பயன்படுத்தும் அலங்காரத் தையல்கள் பற்றி மாணவர்களால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன
   A – காட்டுருவை தைப்பதற்கு கம்பளித் தையலையும் லேசிடேசி தையலையும் பயன்படுத்துதல்
   B – விளிம்புகளை பூரணப்படுத்துவதற்கு இரேந்தை பிடித்தல்
   C – துணிக்கு அணையிடுவதற்கு பெருநூர்லோடி தைத்தல்
   D – விளிம்புகளை அலங்காரமானதாக தோற்றமளிப்பதற்கு சிறுநூாலோடல்
   இவற்றுள் தையல் நுட்பமுறையானது
   (1) A (2) B (3) C (4) D

34.  
மேற்பாட்டப்பட்டுள்ள A, B உருக்களாவன முறையே
   (1) லேசிடேசி தையல், அடைப்புத் தையல்
   (2) கம்பளித் தையல், நரம்புத் தையல்
   (3) நரம்புத் தையல், லேசிடேசித் தையல்
   (4) கம்பளித் தையல், அடைப்புத் தையல்

35. தாவர நார்களில் இருந்து பெறப்படும் துணிவகைகள் இரண்டு
   (1) மல் துணி, லினன் துணி
   (2) வொயில், ரெயோன்
   (3) ஒலோன், மல் துணி
   (4) ரெயோன், நென்சுன்

36. மனித சமுதாயத்தில் மிகச் சிறிய அலகு
   (1) மனை (2) பாடசாலை (3) விளையாட்டு சமூகம் (4) வழிபாட்டு இடம்

37. திருமணத்தின் பின் முதல் குழந்தை பிறந்தவுடன் நிறைவடையும் காலபருவமானது
   (1) வளர்ச்சிப் பருவம் (2) ஆரம்பப் பருவம்
   (3) முதிர்ச்சிப் பருவம் (4) விரிந்த பருவம்

38. சிவப்பு நீல வர்ணங்களை சம அளவில் கலப்பதன் மூலம் பெறப்படும் வர்ணம்
   (1) பச்சை (2) ஊதா (3) செம் மஞ்சள் (40 மஞ்சள்

39. கருக் குடும்பத்தை குறிக்கும் வேறு பெயர்
   (1) பிரதான குடும்பம், ஒன்றிணைந்த குடும்பம்
   (2) அடிப்படைக் குடும்பம், தனிக் குடும்பம்
   (3) உப குடும்பம், விரிவடைந்த குடும்பம்
   (4) இணைந்த குடும்பம், ஆரம்பக் குடும்பம்

40. மனையைத் திட்டமிடுகையில் அறைக்கான யன்னல்களுக்கும், கதவுகளுக்கும் ஒதுக்கப்படும் பரப்பளவுகளானது முறையே
   (1) 1/6 ,1/8 (2) 1/7 ,1/15 (3) 1/8, 1/6 (4) 1/5, 1/7

සියලුම හිමිකම් ඇවිරිණි / All Rights Reserved]

கல்வி,உயர்கல்வி தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational

85 | S | I, II

**கல்விப் பொதுத்தராப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 2025(2026) மாதிரி முன்னோடி வினாப்பத்திரம்**

**General Certificate of Education (Ord.Level) Examination,2025(2026) Preliminary Exam**

மனைப் பொருளியல் 11

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா உட்பட மேலும் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து,ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்
- முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகள், ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 10 புள்ளிகள் விதம் வழங்கப்படும்

நிர்வாக அதிகாரியான ருவான். புறநகர் பகுதியில் தனது மனைவியுடனும் அவரது தாயாருடனும் வசித்து வருகின்றார். அவரது மனைவி ஐந்து மாத கர்ப்பிணியாவாள்.அவளுக்கு முன்பள்ளி பருவ பெண் பிள்ளை ஒருவரும் உள்ளார்.பாட்டி சிறிய நிலப்பரப்பில் உணவுக்கு தேவையான பயிர்களை பயிர் செய்கிள்றாள் மனைவி சுயதொழிலாக உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றாள் அவள் வீட்டை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருப்பதில் ஆர்வமாக உள்ளார

.

1. கர்ப்பவதித் தாயாருக்கு அவசியமான பெரும் போசணை, நுண்போசணைகளை பெயரிடுக
2. கணவன் வேலைக்குசெல்லும் போது மதிய வேளை உணவுக்காக எடுத்துச் செல்வதற்கு உகந்த பேணப்பட்ட உணவுகள் இரண்டை எழுதுக
3. மனையாள் உணவு தயாரிக்கும் போது பயன்படுத்தும் நுட்பமுறைகள் நான்கைக் குறிப்பிடுக
4. கர்ப்பவதித் தாய் ஒருவருக்கு இரும்புச்சத்து அவசியமாவதற்கு காரணங்கள் இரண்டு தருக
5. முன்பிள்ளைப் பருவப் பிள்ளைக்கு உணவை உட்கொள்ள பழக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டை எழுதுக
6. குழந்தை ஆடைக்கான பாங்கு ஒன்றை வரைந்து, அதற்கு பொருத்தமான காட்டுரு ஒன்றை வரைக
7. முன்பள்ளிப் பிள்ளைக்கான ஆடைகளை தைப்பதற்கு, துணியை தெரிவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டை எழுதுக
8. பாட்டிபயிர் செய்வதற்குப் பயன்படுத்திய முறைகள் இரண்டையும், பயிர் செய்த பயிர்கள் இரண்டையும் குறிப்பிடுக
9. மனையில் இடத்தைச் சிக்கனப்படுத்தக் கூடிய பல் தொழிற்பாட்டுத் தளபாடங்கள் இரண்டைக் குறிப்பிடுக
10. முன்பிள்ளைப் பருவப் பிள்ளைக்கு மூன்று வயது முடிவில் வழங்கப்படும் தடுப்பூசி எது?

2. (1) தையல் முறைகளின் வகைப்படுத்தலுக்குஏற்ப அடிப்படைத் தையல்கள் மூன்றை குறிப்பிட்டு அவற்றுக்கான வரைபடத்தை வரைக
   (2) குழந்தை ஆடைகளை அலங்கரிக்கும் முறைகள் மூன்றை எழுதுக
   (3) துணையணிகளை நிர்மாணிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கை சுருக்கமாக விபரிக்குக

(மொத்த புள்ளி 10)

3. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மருத்துவமனையில் அவர்களது போசணை பற்றி வைத்தியர்களால் அறிவுறுத்தப்பட்டு சிலரிடம் அவர்களால் உட்கொண்ட காலை உணவு பற்றிய தகவல்களை பெற்றுக் கொண்டார்கள்

   A – அம்மா பட்டர் ஜாம் தடவிய பாண்
   B - அம்மா அவித்து தாளித்த கௌப்பி, கட்டை சம்பல், துருவிய தேங்காய்ப் பூ
   C –அம்மா தேங்காய் ரொட்டியும் மிளகாய்ச் சம்பலும்

   1. a) – மேற்காட்டப்பட்ட உணவு வேளைகளில் கர்ப்பவதித் தாய்க்கு பொருத்தமான உணவை பெயரிடுக
      b) – அவ் உணவு வேளையை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் இரண்டைத் தருக

   2. நீங்கள் தெரிவு செய்த உணவு வேளையில் பயன்படுத்திய சமையல் முறைகளைக் குறிப்பிடுக
   3. அயடீன் குறைபாட்டினால் ஏற்படக் கூடிய நோய் நிலைமைகள் நான்கை தருக

(மொத்த புள்ளி 10)

4. 1. உணவைப் பழுதடையச் செய்யும் பௌதிக காரணிகள் நான்கைக் குறிப்பிடுக
   2. உணவு பழுதடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கட்டுப்படுத்தி உணவை பாதுகாக்கும் முறைகள் மூன்றைக் குறிப்பிடுக
   3. பலா,/ ஈரப் பலா உலர்த்துதல் படிமுறையை பாச்சற் கோட்டு படம் மூலம் காட்டுக

(மொத்த புள்ளி 10)

5. 1. மனைக்கு இயற்கையான காற்றோட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் வேறு முறைகள் மூன்றை எழுதுக
   2. வீட்டைக் கட்டுவதற்கான நிலத்தை தெரிவு செய்கையின் போது கருத்திற் கொள்ள வேணடிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக
   3. கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் படுக்கை அறைக்கான தளத்திட்டத்தை வரைக

      (அளவுத்திட்டம் : 1அடி = 1 சென்றி மீற்றர்)

      அறையின் பரப்பளவு – 12அடி × 10அடி

      12 அடி சுவரில் 1 ½ அடி அகலத்தில் இரண்டு யன்னல்கள் உள்ளன

      10 அடி அகலமான சுவரில் 2 ½ அடி அகலமான கதவு அமைக்கப்பட்டுள்ளுத

(மொத்த புள்ளி 10)

6. 1. பெண் இனப்பெருக்க தொகுதியின்உறுப்புகள் மூன்றைக் குறிப்பிட்டு அவற்றின் தொழிற்பாடுகள் ஓவ்வொன்றை எழுதுக
   2. தாய்பால் ஊட்டுவதனால் குழந்தைக்கு கிடைக்கும் நன்மைகள் மூன்றைத் எழுதுக
   3. குழந்தைக்கு மொழி விருத்தியையும், சமூக விருத்தியையும் எற்படுத்துவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நான்கை கலந்துரையாடுக

(மொத்த புள்ளி 10)

7. 1. கட்டிளமைப்பருவ பருவங்களை குறிப்பிட்டு, அப் பருவங்களுக்கான வயதெல்லைகளை தருக
   2. கட்டிளமைப் பருவ உடல் விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணங்கள் மூன்றைக் குறிப்பிடுக
   3. (அ) இனப்பெருக்க சுகாதாரத்தை வரையறுக்க
      (ஆ) இனப்பெருக்க சுகாதாரத்தை பேணுவதன் நன்மைகளை விளக்குக

( மொத்த புள்ளி 10)

குல்வி உயர்கல்வி தொழிற்கல்வி அமைச்சு தொழில் நுட்ப பிரிவு
Ministry of Education, Higher Education and Vocational Education

85 | T | 1

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை 2025(2026) மாதிரி முன்னோடி வினாப்பத்திரம்**

**General Certificate of Education (Ord Level) Examination 2025(2026) Preliminary Exam**

மனைப் பொருளியல்

1,11 விடைகள்

| வினா | விடை | வினா | விடை | வினா | விடை | வினா | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 3 | 11 | 1 | 21 | 1 | 31 | 2 |
| 02 | 1 | 12 | 2 | 22 | 3 | 32 | 2 |
| 03 | 3 | 13 | 4 | 23 | 3 | 33 | 2 |
| 04 | 2 | 14 | 4 | 24 | 3 | 34 | 3 |
| 05 | 3 | 15 | 3 | 25 | 2 | 35 | 1 |
| 06 | 4 | 16 | 2 | 26 | 3 | 36 | 1 |
| 07 | 3 | 17 | 2 | 27 | 4 | 37 | 1 |
| 08 | 1 | 18 | 2 | 28 | 1 | 38 | 2 |
| 09 | 3 | 19 | 4 | 29 | 2 | 39 | 2 |
| 10 | 4 | 20 | 4 | 30 | 3 | 40 | 2 |
| | | | | | | | |

( மொத்த புள்ளி(40*1=40)

பகுதி 11

1 (1) பெரும் போசணைகள்:- காபோவைதரேற்று, புரதம்

நுண்போசணை:- போலிக்கமிலம் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(2) மீன் புளித்தீயல், சீனிச் சம்பல், கத்தரிக்காய் மோஜ, அச்சாறு, சட்னி,

(2 விடயத்திற்கு 2 புள்ளி)

(3) பிசைதல், கலத்தல், அடித்தல், துண்டுகளாக வெட்டுதல், பதப்படுத்துதல்

(4 விடயத்திற்கு 2 புள்ளி)

(4) தாயின் குருதிக் கனவளவு அதிகரித்தல்

குழந்தையின் குருதி உற்பத்தி

பிரசவத்தின் போது இழக்கப்படும் குருதி இழப்பு

முளையத்தின் ஈரலில் இரும்பு சேமிக்கப்படல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(5) உணவு உட்கொள்ள வேறாக தனியொரு இடம் தயார்படுத்துதல்

உணவு உட்கொள்ள முன்பு இரு கைகளையும் கழுவ பழக்குதல்

தனியே உணவு உட் கொள்ள பழக்குதல்

பிள்ளைக்கான பீங்கான் கோப்பையை பாவித்தல்

சாப்பாட்டு மேசைக்கு மேல் பீங்கான் கோப்பைகளை வைத்து பிள்ளையை வேறுறொரு கதிரையில் இருத்தி உணவூட்டல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(6) சிறிய காட்டுருவாக இருத்தல்

ஏளிய பாங்காக இருத்தல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(7) பருத்தித் துணியாக இருத்தல்

தனி நிறத்தையுடையதும், அச்சிடப்பட்டதுமானதாக இருத்தல்

வியர்வை ஈரப்பதனை உறிஞ்சக் கூடியதாக இருத்தல்

கழுவுவதற்கு ஏற்றதாக இருத்தல்

உலர்த்துதல் ,அழுத்துதலுக்கு ஈடு கொடுக்கக் கூடியதாக இருத்தல்

சிறிய காட்டுருக்களைக் கொண்ட துணியாக இருத்தல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(8) போத்தல்கலில் பயிர் செய்தல்

மழை நீர் பீலிகளில் பயிர் செய்தல்

கோபுர பறிர்ச் செய்கையை மேற்கொள்ளல்

அரிசி பைகளைப் பயன்படுத்தி பயிர் செய்தல்

(வல்லாரை, மஞசள், சோளம், புதினா, பசளி, ) (ஒரு முறைக்கு1,பெயர்குறிப்பதற்கு 1 புள்ளி2)

(9) தட்டுக் கட்டில், சுவரில் மடித்துவிடல் அல்லது மடிக்கும் மேசை

முடிக்கும் கட்டில், சுவர் அலுமாரி

முடிக்கும் உடுப்பு இறாக்கை (2 விடயத்திற்கு 2 புள்ளி)

(10) டெடனஸ் இரு கூட்டு வக்சீன் DT, போலியோ வாயமூலம் 5 சொட்டு (2 விடயத்திற்கு 2 புள்ளி)

2. (1) பெரியநுலோடல் ----- ----- ----- ----- -----

சிறு நுலோடல் -- -- -- -- -- --

விளிம்புத் தையல்

சோம் தையல்

தோற்றா சோம் தையல்

விஸ்பத்தையல் --- --- --- ---

(பெயரிடுவதற்கு 1 ½ படத்திற்கு1 ½ புள்ளி) மொத்தம் 3 புள்ளி

(11) எம்ரெய்ரர் செய்தல், வர்ணம் தீட்டுதல், ஒடுக்க மடிப்பிடல், சுருக்குகள் மடிப்புகள் இடல்

அப்ளிக் செய்தல், அலங்காரச் சுருக்கிடல், அலங்கார தெறிகள் பிடித்தல், ரிபன் பிரேடிங்.

தனிநிறத் துணியையும்,அலங்காரத் துணியையும் பயன்படுத்தி தைத்தல் (3விடயத்திற்கு 3புள்ளி)

(111) *துணை அலங்காரம் ஒன்றை தைப்பதற்குப் பொருத்தமான மாதிரியுருவையும் துணியையும் தெரிவு செய்தல்

*மாதிரியுருவை துணியில் வெட்டும் போது ஊடைநூல், பாவு நூல், துணியின்ஓரம் ஆகியவை தொடர்பாகவும் தையல் விடுவெளி பற்றியும் கவனத்தில் கொள்ளல்

*துணியின் நிறத்திற்கும் இழைக்கும் பொருத்தமான நூலைத் தெரிவு செய்தல்

*தையற் செயற்பாட்டின் இறுதியில் துணை அலங்காரத்தின் உட்புற. வெளிப்புறங்களைச் சீராக்கம் செய்தல் (4 விடயத்திற்கு 4 புள்ளி)

3. (1) அவித்து தாளித்த கௌப்பி, மாசி சேர்ந்த கட்டைச் சம்பல், துருவிய தேங்காய்

(தெரிவு செய்தமைக்கு 1 புள்ளி)

தெரிவு செய்தமைக்கு காரணம்

- முளையத்தின் வளர்ச்சிக்கு, தாயின் உடலுக்கு தேவையான போசணைக்கு புரதம், கல்சியம், விட்டமின் B தொகுதி, விட்டமின் A, விட்டமின் C
- கர்ப்பகாலத்தில் ஏற்படும் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கான நார்பொருள் கிடைக்கின்றமை

(2 விடயத்திற்கு 2 புள்ளி)

(11) ஈரவெப்பச் சமையல் -- நீரினுள் இட்டு அவித்தல்

சூடான எண்ணெயில் சமைத்தல் -- சிறிதளவு எண்ணெயிட்டு பொரித்தல்

(தெரிவு செய்தது பிழையாயின், காரணத்திற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது)

(3 புள்ளி)

(111) குறைமாத குழந்தை பிறப்பு

மந்த புத்தியுள்ள குழந்தைகள் பிறத்தல்

குறைபாடுடைய குழந்தை பிறத்தல்

கரு கலைதல்

குழந்தை இறந்து பிறத்தல் (4 விடயத்திற்கு 4 புள்ளி)

4. (1) நொருங்குதல், நசிதல், தகர்தல், ஈரப்பற்று மாற்றம், வெப்பநிலை மாற்றம்,வெட்டுப்படல்

(3 விடயத்திற்கு 3 புள்ளி)

(11) நீரகற்றல், தாழ் வெப்பம் பயன்படுத்துதல், உயர் வெப்பம் பயன்படுத்துதல்

நற்காப்பு பதார்த்தங்கள் இடல் கதிர்வீச்சுக்கு உட்படுத்தல் (3 விடயத்திற்கு 3 புள்ளி)

(111) நன்றாக முற்றிய பலா அல்லது ஈரப்பலாவை தெரிவு செய்தல் ------------- விதைகளை நீக்கிச் சுளைகளை சுத்தம் செய்தல் --------------- கழுவுதல் --------------- கீலங்களாக வெட்டுதல் --------------

நீரில் வெளிறச் செய்தல் (பிளாஞ்) ---------------- பரவுதல் ------------------- சூரிய வெப்பத்தில் உலர்த்துதல் ----------------------- பொதியிடல் ( ½ புள்ளி விகிதம் 4 புள்ளி)

5. (1) நிலா முற்றமும் தடாகமும் கண்ணாடி கற்கள,˙ கொங்கிறீறு் கிறில்

ஒளியூடு பரவக்கூடிய பைபர் சீட், இரும்பு வலை கூரையில் பதிக்கக் கூடிய ஒளியோடுகள்


ஊயர அமைப்புக்கு ஏற்ப பாவு அமைத்தல்,

(11) நிலத்தின் தன்மை , நிதி வசதிகள் , பிரச்சனையற்ற காணி உறுதி, உட்கட்டமைப்பு வசதிகள் சுற்றுப்புறச் சூழல் (3 விடயத்திற்கு 3 புள்ளி)

(111) * அளவுத்திட்டம் சரியானதாக(1 அடி = 1 சென்றி மீற்றர்)

* குறியீடுகளை சரியாக பயன்படுத்துதல்

* கதவு




* யன்னல்

* அறைகளின் அளவுகள் சரியாக இருத்தல் (4 விடயத்திற்கு 4புள்ளி)

(மொத்தம் 10 புள்ளி)

6. (1) சூலகம் : சூல் முதிர்ச்சியடைதல்

முதிர்ந்த சூல் வெளிவிடப்படல்

பெண் இனப்பொருக்க ஓமோன்கள் உற்பத்தி

பலோப்பியன் குழாய் : சூலைக் கொண்டு செல்லல்

கருக்கட்டல் இடம்பெறல்

கருப்பை : முளையம் உட்பதித்தல்

முளையத்தின் போசணைக்கான சூல் வித்தகம்,

தொப்புள் நாண் என்பன உருவாகுதல்

யோனிவழி : விந்து கடத்தப்படல், பிரசவம் நிகழல்

(11) குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான போசணைப் பதார்த்தங்கள் தேவையான அளவில் அடங்கியிருத்தல்

தாயின் முதற்பாலில் உள்ள கொலஸ்திரம் குழந்தைக்கு இயற்கையான நோய் எதிர்ப்பு சக்கியை வழங்கும்

சமிபாடு இலகுவாகும்

மலச்சிக்கல் குறைதல்

ஒவ்வாமை குறைதல்

(111) மொழி விருத்தி : முகத்திற்கு முகம் பார்த்து குழந்தையுடன் அன்பாக கதைத்தல்

தாலாட்டுப்பாடல் பாடுதல்

கதைகள் கூறுதல்

இலகுவான சொற்களை பாவிப்பதற்கு ஊக்குவித்தல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

சமூக விருத்தி : குடும்ப அங்கத்தவர்கள் குழந்தையுடன் எப்பொழுதும் கதைத்தல்

குடும்பத்தவர்கள் சேரும் இடத்திற்கு குழந்தையை எடுத்துச் செல்லல்

சிறு பிள்ளைகளுடன் பழகுவதற்கு வாய்ப்பளித்தல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)

7.(1) வயது 10 – 13 வரை முன் கட்டிளமைப் பருவம்

வயது 14 – 16 வரை நடுத்தரக் கட்டிளமைப் பருவம்

வயது 17 – 19 வரை பின் கட்டிளமைப் பருவம்

(11) உணவுமுறைகள்

போசணை

உடற்பயிற்சி

ஒமோன்களின் செல்வாக்கு

பரம்பரை

(111) (அ) இனப் பெருக்க தொகுதி மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக காணப்படுகின்ற உடல்,உள, சமூக நன்நிலைப்பாடாகும்

(ஆ) *வெளிப்புறமாக அமைந்துள்ள இனப்பெருக்க உறுப்புகளினதும் அதன் சூழவுள்ள பகுதிகளினதும் சுத்தத்தைப் பேணல்

*அநாவசிய கருத்தரித்தலைத் தவிர்த்தல்

*பாலியல் தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறல் (2 விடயத்திற்கு 2 புள்ளி)